**TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION**
No.19A Rukmini Lakshmipathy Salai (Marshalls Road),
Egmore, Chennai 600 008. Phone: ++91-44-28411376 /
28411378 / 28411379, Fax: ++91-44-28411377
email: tnerc@nic.in Website: www.tnerc.gov.in

# PUBLIC NOTICE

## Public Hearing on the Petition filed for revision of "Miscellaneous Charges" (Non-Tariff) by Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO)

1. The Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) has filed a Petition before the Tamil Nadu Electricity Regulatory Commission (TNERC) for revision of Miscellaneous Charges involving Service connection charges, Security Deposit, Meter Rent, Meter Caution Deposit, Reconnection Charges, Development charges, etc., The current Miscellaneous tariff in Tamil Nadu was fixed by TNERC on 31.08.2004 with effect from 01.10.2004. The present Miscellaneous Charges Petition proposes increase affecting certain consumers (new & existing).
2. The petition of TANGEDCO was admitted by the Commission on 13.03.2018 in M.P. No.7 of 2018. TANGEDCO hosted the petition in its website www.tangedco.gov.in on 17.4.2018 inviting objections/ comments on its petition from the public, allowing one month time. On which 12 stakeholders furnished their objections/comments and TANGEDCO has responded to each objector individually and submitted a copy of the same to the Commission.
3. In continuation of the above, the Commission hereby announces the Public Hearing as per the schedule below. Those who are interested may make it convenient to appear before the Commission on the following date at the given venue and give their comments / suggestions. Those who register their names in the venue between 10.00 AM to 11.30 AM of the hearing date alone would be allowed to present their case. The revised miscellaneous charges proposed by TANGEDCO is available in TNERC website www.tnerc.gov.in and TANGEDCO website www.tangedco.gov.in

| Date and Day | Place | Venue | Time |
|---|---|---|---|
| 25.09.2019 (Wednesday) | Chennai | Vani Mahal, (Obul Reddy Hall) 103, G.N. Chetty Street, T. Nagar, Chennai 600 017. | From 11.00 AM |

Secretary
Tamil Nadu Electricity Regulatory Commission

DIPR/1039/DISPLAY/2019

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19ஏ. ருக்மிணி லட்சுமிபதி சாலை (மார்ஷல்ஸ் ரோடு). எழும்பூர். சென்னை 600 008.
தொலைபேசி: ++91-44-28411376/28411378/28411379 நிகரி: ++91-44-28411377
மின்னஞ்சல்: tnerc@nic.in இணையதளம்: www.tnerc.gov.in

## பொது அறிவிப்பு

### தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லிமிடெட் (TANGEDCO) தாக்கல் செய்துள்ள பல்வகை கட்டணங்கள் (மின்கட்டணம் இல்லாதது) மாற்றியமைக்க கோரும் மனு மீது பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம்

1. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லிமிடெட் (TANGEDCO) தற்போது விதிக்கும் மின் இணைப்பு கட்டணம், பிணைவைப்புத் தொகை, மின் அளவீட்டு கருவியின் வாடகை, மின் அளவீட்டு கருவி மீதான காப்புத் தொகை, மறு இணைப்புக் கட்டணம், மேம்பாட்டுக் கட்டணம் போன்ற மின் கட்டணம் இல்லா பல்வகை கட்டணங்களை மாற்றியமைக்க தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மனுதாக்கல் செய்துள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள பல்வகை கட்டணங்கள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் 1.10.2004 முதல் நடைமுறைப்படுத்த 31.8.2004 தேதியிட்ட ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது. இப்போது தாக்கல் செய்துள்ள மனுவில் சில (புதிய மற்றும் தற்போதுள்ள) மின் உபயோகிப்பாளர்களுக்கு பல்வகை கட்டணங்களை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தாக்கல் செய்துள்ள மனு பல்வகை மனு எண்.7/2018இல் 13.3.2018 அன்று ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த மனுவை 17.4.2018 அன்று தங்களுடைய இணையதளத்தில் (**www.tangedco.gov.in**) பதிவேற்றம் செய்து இதற்கு உரிய ஆட்சேபனைகள் மற்றும் கருத்துரைகளை பொதுமக்கள் அளிக்குமாறு ஒரு மாதகால அவகாசம் கொடுக்கப்பட்டு இதற்கு 12 நபர்கள் தங்களுடைய ஆட்சேபனைகள் மற்றும் கருத்துரைகளைக் கொடுத்துள்ளனர். இவற்றிற்கு தனித்தனியே அந்தந்த நபர்களுக்கு தங்களுடைய விளக்கத்தை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் அளித்து அதன் நகலை ஆணையத்திடம் அளித்துள்ளது.

3. இதன் தொடர்ச்சியாக ஆணையம், கீழ்க்கண்ட அட்டவணையின்படி பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கான செயல்முறைத் திட்டத்தை அறிவிக்கிறது. விருப்பமுள்ளவர்கள் பின்வரும் நாளில் ஆணையத்தின் முன் ஆஜராகி தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம். கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறும் நாளன்று காலை 10.00 மணிமுதல் 11.30 மணிவரை தங்களுடைய பெயர்களை பதிவு செய்பவர்கள் மட்டுமே கூட்டத்தில் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்க அனுமதிக்கப்படுவார்கள். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் உத்தேசித்துள்ள பல்வகை கட்டணங்கள் ஆணையத்தின் இணையதளமான **www.tnerc.gov.in** மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இணையதளமான **www.tangedco.gov.in** இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

| தேதி மற்றும் நாள் | இடம் | நிகழ்விடம் | நேரம் |
|---|---|---|---|
| 25.09.2019 (புதன் கிழமை) | சென்னை | வாணிமகால் (ஒபுல்ரெட்டி கூடம்), 103, ஜி.என். செட்டிதெரு, தி.நகர், சென்னை 600 017 | காலை 11.00 மணிமுதல் |

**செயலாளர்**
**தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம்.**

செ.ம.தொ.இ./1039/ வரைகலை/ 2019